**நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி - 2020**

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை உடன்படிக்கையின் 4.02 (ஐ) சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டம் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 883.88 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.65 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மார்ச் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட நிமித்தமாகவுள்ளது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேண வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்டப் பணிகளின் பௌதீக செயலாற்றல்

| கூறு | பணி | | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|---|---|---|
| நிலைபேறான நகர அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காணல் | திட்டமிடல், விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு, போக்குவரத்து நெரிசல், நகர்ப்புற அபிவிருத்தி மேம்பாடுகள், சுற்றுச்சூழல் முகாமைத்துவசேவைகளுக்கான ஆலோசனை சேவைகள் | (i) | 38 ஆலோசனை அறிக்கைகள் வழங்கப்பட்டாலும், அந்த அறிக்கைகள் பெறப்பட்டு 1 முதல் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்த அறிக்கைகள் 2021 மார்ச் மாதம் வரையிலும் மீளாய்வு செய்யப்படவில்லை. | செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டமையால் மூன்று மதியுரை ஒப்பந்தங்களும் 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய வலுவான மற்றும் செயற்திறனான ஆலோசனை சேவைகளை நிர்வகிக்கும் நடைமுறையொன்று செயல்படுத்தப்பட வேண்டும். |
| | | (ii) | மீளாய்வாண்டின் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 30 ஆலோசனை அறிக்கைகள் 2021 ஏப்ரல் இறுதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை. ஆலோசனை அறிக்கை 1 முதல் 13 மாதங்கள் வரை தாமதமாக இருந்தாலும், எந்தவொரு ஆலோசகர்களிடமிருந்தும் தாமதக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. மேலும், தாமதக் கட்டணத்தை திரும்பப் | கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக நாடு மூடப்பட்டிருந்த காரணத்தால் செயற்திட்டத்தினை திட்டத்தினை அடைய முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய வலுவான மற்றும் செயற்திறனான ஆலோசனை சேவைகளை நிர்வகிக்கும் நடைமுறையொன்று செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவதற்கான எந்த விதிகளும் ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. போதிய ஆலோசனை பணியாளர்களை நியமிக்காமையே இந்த தாமதத்திற்கு பிரதான காரணமாகியிருந்தது. | | |

**2.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| கிடைத்த தகவலின்படி, இது கடன் வழங்கும் முகவரகத்தால் வழங்கப்பட்ட ரூபா 883.88 மில்லியனுக்கு சமனான் 4.65 மில்லியன் அமெரிக்க டொலர்களில் செயற்திட்டத்தின் பணிகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 21 மாதங்கள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருந்தது 1.32 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு சமனான ரூபா 255.40 மில்லியன் அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 29 சதவீதம் மட்டுமே. மேலும், செயற்திட்டத்தில் மோசமான முன்னேற்றம் மற்றும் திட்டத்தின் மோசமான நிதி எதிர்வுகூறல் காரணமாக, ரூபா 14.79 மில்லியனுக்கு சமமான 79,394 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்படாது 2020 திசெம்பர் 31 இல் சிறப்பு (டொலர்) கணக்கில் தக்கவைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நிதியினைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைக்கு தாக்கம் ஏற்படுவதுடன், அது செயற்திட்டத்தின் மோசமான முன்னேற்றத்தை பாதிக்கலாம். | கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக செயற்திட்டப்பணிகள் தாமதமானது. | செயற்திட்டத்தின் பணிகள் திட்டமிட்ட நேரத்திற்குள் மற்றும் பாதீட்டுக்கு ஏற்ப நிறைவு செய்ய வேண்டும். |

**2.3 மனதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அவதானிப்புகள்**

செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பதவியணி 28 ஆவதுடன், அவற்றுள் 8 பிரதான முகாமைத்துவ பணிகள் அதாவது சிரேஷ்ட செயற்திட்ட முகாமையாளர், பெறுகைகள் நிபுணர் மற்றும் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் 2020 திசெம்பர் 31 வரையிலும் ஆட்சேர்க்காது வெற்றிடமாக காணப்பட்டது.

| **பதவியணி** | **பதவிகளின் எண்ணிக்கை** | | | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **கணக்காய்வு அவதானிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| | **அங்கீகரிக்கப்பட்ட** | **2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி** | **வெற்றிடங்கள்/ மிகைப் பதவியணி** | | | |
| அனைத்துப் பதவியணி | 28 | 20 | 8 | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயற்திட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 28 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி 20 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடமான பதவியணி 8 ஆகும். இந்த நிலைமை செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பணிகளுக்கு பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | செயற்திட்டத்தின் திட்டமிடல் பணிகளுக்கு தேவையான ஆகக் குறைந்த பதவியணியை பிரதானமாக ஆட்சேர்ப்பு செய்ய செயற்திட்ட முகாமைத்துவ அலகு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஏனைய இணைந்த பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடைமுறையொன்று உருவாகியுள்ளது. (அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி) இதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகில் காணப்பட்ட நிலைமை தாக்கம் செலுத்தியது. சில இணைந்த பணிகள் பதவியணிக்கிடையே பறிமாற்றப்பட்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் நிறைவேற்றப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |